28.10.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஓ.எஸ்.எண். 240 /2015 ) திரு.கோமதி.

2 ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

1) எனது வீட்டின் சர்வே எண்.729/6 என்றால் சரிதான். பழைய சர்வே எண்.476/2 ஏ 2. எனது வீட்டிற்கு மேல்புறம் உள்ள சந்தின் சர்வே எண்.729/5 என்றால் சந்தே கிடையாது. எனது பெயர் பொன்னையாக்கோனார் மகன் கோமதிக்கோனார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எனது பெயருக்கு சர்வே எண்.729/6 க்கு வழங்கப்பட்ட பட்டா என்றால் எனது பெயரில் உள்ளது தான். அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது வீட்டிற்கு மேல்பக்கம் உள்ள சந்து சர்வே எண்.729/5 சந்தின் கிழமேல் அளவு 4.5 என்றால் அந்த அளவை நாங்கள் அளக்கவில்லை. தென்வடல் 32 அடி என்றால் 32 ½ அடி. ½ அடி என்பது கிடையாது என்றும் 32 அடி தான் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது காண்பிக்கப்படும் ஆவணம் வழக்கு தாக்கல் செய்யும் போது பிரதிவாதிக்கு சமனுடன் வழங்கப்பட்ட நகல் ஆவணம் என்றால் சரிதான். கோமதியா பிள்ளை,சின்னகருப்ப கோனாருக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் நத்தம் சர்வே எண்.476/2 ஏ 2 என்றால் சரிதான். கிழமேல் அடி 52, தென்வடல் அடி 34 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜெராக்ஸ் ஆவணம் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (சான்றிட்ட நகல் பெற தடை செய்யப்படுகிறது.) தற்போது காண்பிக்கப்படும் ஆவணம் பிராது வரிசை எண்.2 என்றால் சரிதான். பிராது வரிசை எண்.2 ல் முதல் பக்கத்தில் 11 வது வரியில் சொக்கக்கோனார் குமாரர் என்று இடைசொருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது வரிசை எண்.2 ஆவணத்தில் பக்கம் 2 ல் முதல் வரியை பேனா மையினால் கோடு போட்டு அடித்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் நான் போடவில்லை. பிராது வரிசை 2 ல் உள்ள ஜெராக்ஸ் ஆவணம் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.(சான்றிட்ட நகல் பெற தடை செய்யப்பட்டுள்ளது). பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 3 வது பக்கத்தில் மொத்த சதுர அடி 894 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் நாங்கள் திருத்தவில்லை. நான் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். அதே பக்கத்தில் ரூ.2065 என்பது 2125 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) அதே பக்கத்தில் கடைசி வரியில் பேனாவால் அடிக்கப்பட்டுள்ளது என்றால் அசல் ஆவணத்தை கொண்டு வந்து தருகிறேன். கயத்தார் நத்தம் சர்வே எண்.729,

பழைய சர்வே எண்.494 ஆகும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1,2 ஆவணத்திற்கும் நான் வீடு கட்டியுள்ள இடத்திற்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. கோமதியா பிள்ளை கொடுத்த சொத்தில் கிழமேல் 52 அடி உள்ளது என்றால் சரிதான். முழுவதையும் நான் கிரையம் பெறவில்லை கிழமேல் 27 ½ அடி மட்டும் தான் கிரையம் வாங்கியுள்ளேன். தென்வடலாக 32 ½ அடி கிரையம் பெற்றுள்ளேன். பிராதில் மொத்தம் உள்ள 52 அடியில் 27 ½ அடி போக யார் வசம் உள்ளது என்று சொல்லவில்லை என்றால் நான் புழங்கிக்கொண்டு வருகிறேன் இடம் என் இடம் தான். நான் வா.சா.ஆ.1,2ல் உள்ள திருத்தங்கள் மற்றும் சர்வே எண் எனக்கு நீதிமன்றத்திற்கு தெளிவாக தெரிந்துவிடும் என்ற காரணத்திற்காக நான் நீதிமன்றத்திற்கு மனு செய்து பெற்றுக்கொண்டுவிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.
திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
28.10.2025.